FREE EDITION

January - 2018



# ஜோதி

Jothi

Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 11 - 131

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

மேல்மருவத்தூர்
ஆதிபராசக்தி சித்தர்பீடத்தில்

**இருமுடி விரதம்**

**13.12.2017 முதல்**
**30.01.2018 வரை**

**தைப்பூச ஜோதி**



ஆன்மிககுரு அருள்திரு
அம்மா அவர்களின்
திருக்கரங்களினால்
ஏற்றப்படவிருக்கும்
ஏகஜோதியான

**தைப்பூச ஜோதி**

**31.01.2018**

# ஒரு மூதாட்டியாக வந்த அன்னை!

## ஆண்டிப்பட்டி சிறுவன்

உடுமலைப்பேட்டைக்கு அருகே இருப்பது ஆண்டிப்பட்டி. அங்கே ஒரு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம். அந்த மன்றத்துக்கு அடிக்கடி வந்து தொண்டு செய்வான் ஒரு சிறுவன். ஈசுவரன் என்பது அவன் பெயர். ஏழாம் வகுப்பு படித்து வந்தான்.

2.2.88 அன்று பள்ளிக்கூடம் சென்றுவிட்டு மாலை நண்பர்களோடு சைக்கிளில் திரும்பி வந்து கொண்டிருந்தான். நண்பர்களோடு வேகமாக சைக்கிள் ஓட்டி வந்த அவன் எதிர்ப்புறத்திலிருந்து வந்த ஒரு டிராக்டர் மீது மோதி விபத்துக்கு ஆளானான். உடம்பில் பலத்த அடி. மூக்கு, மண்டை ஆகிய இடங்களில் இரத்தம், நாக்கு நசுங்கிவிட்டது.

அடிபட்ட சிறுவனைத் தூக்கிக்கொண்டு உடனே குமரலிங்கம் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தனர். அங்கே குணப்படுத்த வசதியில்லை. உடனே உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை தரப்பட்டது.

நாக்குப் பகுதியில் பலத்த அடி. அவனால் வாய் திறந்து பேச முடியவில்லை. ஓம்… ச… ச.. என்று குழறத்தான் முடிந்தது. ஓம் என்ற பிரணவத்தை மட்டுமே அவனால் உச்சரிக்க முடிந்தது.

**இசைமணி**

சிறுவனின் தாயார் “எப்போதுமே ‘ஓம் சக்தி! ஓம் சக்தி!” என்று சொல்லியபடி கிடப்பானே அந்த ஓம் சக்தியும் எங்கள் பிள்ளையைக் கைவிட்டு விட்டதே… என்று ஆற்றாமையால் அழுது புலம்பினார்கள்.

பேச முடியாத ஊமையாகி விடுவோமோ என்ற பயத்தில் அந்தச் சிறுவன் அம்மாவின் டாலரைக் கையால் பிடித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுவான். உடம்பில் பட்ட காயங்கள் ஆறி வந்தபடி இருந்தன. பேச்சு மட்டும் வந்தபாடில்லை. இடையில் மருத்துவமனைக்குச் சென்று அவனுக்கு வேப்பிலை, கலச தீர்த்தம் கொண்டு போய்க்கொடுத்தோம்.

அன்று திங்கட்கிழமை. உடுமலைப்பேட்டையில் சந்தை கூடுகிற நாள். சந்தைக்கு வந்த உறவினர்களெல்லாம் பையனின் நிலைமையைக் கேட்டு மருத்துவமனைக்கு வந்து பார்த்துவிட்டு ஆறுதல் கூறிச் சென்றவண்ணம் இருந்தனர். மாலை 6.00 மணி இருக்கும். சிறுவனின் கட்டிலருகே அவனது தாயார் நாச்சம்மாள் அமர்ந்தபடி இருந்தார்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“காற்றினால் உயிர் வளர்ச்சியுண்டு. அந்தக் காற்றே புயலாக மாறினால் அழிவும் உண்டு”.**

# "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


ஒரு மூதாட்டியாக வந்த அன்னை
Page: 1 – 3

அலை கடலுக்கே ஆணையிட்டாள்
Page: 5 - 9

UPCOMING EVENTS
Melbourne: 10, 11, 15
Sydney: 5, 8

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 16

அருள்வாக்கும் அனுபவங்களும்...
பக்கம்: 13

Divine Miracles
Page: 12

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 07

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 16


## ஒரு மூதாட்டியாக ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அப்போது... அந்த அறைக்குள் ஒரு பெண்மணி நுழைந்தாள். வயதான தோற்றம்! சற்று வித்தியாசமான உருவம்! பருத்த உடம்பு! தலைமுடி சடை சடையாகப் பிடித்துக்கொண்டு தொங்கியபடி இருந்தது. முழங்கால் அளவிற்குச் சேலை உடுத்தியிருந்தார். கழுத்தில் உருத்திராட்ச மாலை! கையில் ஒரு எலுமிச்சைப் பழம். அந்த எலுமிச்சம் பழத்தால் தன் கையால் தானே அந்தச் சிறுவனுக்குத் திருஷ்டி கழித்து அந்தச் சாற்றை எடுத்து அவன் நாக்கை நீட்டச் சொல்லித் தடவினார்.

அருகிலிருந்த அவன் தாயாரை நோக்கி "மகளே! உன் மகனின் நா ஒலிக்க வேண்டுமானால் நீ நாத ஒலி தர வேண்டும். முதலில் அதைச் செய்துவிடு!" என்றார் வந்த பெண்மணி!

"நீங்க சொல்றது புரியலையே!" என்றார் அந்தச் சிறுவனின் தாயார்.

"உன் மகனுக்கு மறுபடியும் பேசும் சக்தி வரும். மருவத்தூர் சென்று ஒரு மணியை வாங்கிக் காணிக்கை செலுத்திவிட்டு வந்துவிடு!" என்றார் அந்தப் பெண்மணி.

"நீங்க யாரும்மா..?"

"நான் உடுமலையில் காய்கறி வியாபாரம் செய்து கொண்டு வருகிறேன். என்னைப் பார்க்க வேண்டுமானால் அங்கு வந்து பார்!" - இவ்வாறு கூறிவிட்டு விடுவிடென்று அகன்றார் அந்தப் பெண்மணி.

மறுநாள் காலை..

படுக்கையிலிருந்து கண் விழித்த சிறுவன் புதிய தெம்போடு எழுந்து உட்கார்ந்தபடி "அம்மா எனக்கு இப்ப உடம்பு நல்லா இருக்கும்மா.. வாம்மா வீட்டுக்குப் போகலாம்.." என்று கூறினான்.

நேற்று வரை வாய் பேச முடியாமல் கிடந்தவன் இப்படிச் சரளமாகப் பேசுகிறானே..!

"மகனே.. உனக்குப் பேசுகிற சக்தி வந்து விட்டதடா! மருவூர் ஆத்தா! உனக்குப் பேச சக்தி கொடுத்துட்டா!" என்றாள் குதுகலித்தபடி.

"இரு! இரு! நான் போய்க் காய்கறி மார்க்கெட்டிலிருந்து வந்த அந்தப் பெரியம்மாவிடம் விபரம் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்!" என்று வெளியே ஓடி வந்தார்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**மார்கழி – அமாவாசை–பௌர்ணமி :**

ஆரோக்கிய வாழ்வு உண்டாகும்.
எவ்விதத்திலும் பாதிக்கப்படாத நிலையும், நல்ல ஆரோக்கியமும் உண்டாகும்.

**தை –அமாவாசை–பௌர்ணமி :**

வாழ்க்கையில் வெற்றி உண்டாகும்.
வாழ்க்கையில் எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும்.

## ஒரு மூதாட்டியாக ...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

உடுமலை காய்கறி மார்க்கெட்டெல்லாம் நாச்சம்மாள் தேடினார். அந்தப் பெண்மணியைக் காணவே இல்லை.

“எனுங்க.. தலையெல்லாம் சடைசடையாய்த் தொங்குமே.. கழுத்தில் உருத்திராட்ச மாலை போட்டிருக்குமே.. அந்தம்மா கடை எங்கே இருக்குதுங்கோ..?” என்றார்.

“அந்தம்மா பேர் என்ன?” என்றார்கள்.

“பேர் தெரியாதுங்கோ.. இங்கேதான் காய்கறி விற்பதாகச் சொன்னதுங்கோ..” என்றார்.

“அந்த மாதிரி அடையாளத்தில் யாரும் இங்கே இல்லையே..” என்று கூறிவிட்டு அனைவரும் வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

உடுமலைப்பேட்டை வரும்போதெல்லாம் அவர்கள் அந்த அம்மாவைத் தேடினார்கள். எட்டு மாதங்களாகத் தேடினார்கள்..! எங்கும் தென்படவில்லை.

30.11.88 அன்று அந்தச் சிறுவனின் தாயும் தந்தையும் என்னிடம் வந்து மேற்கண்ட நிகழ்ச்சியைக் கூறினார்கள்.

“என்னம்மா இது..! இன்னும் புரியவில்லையா..? வந்தது வேறு யாரும் இல்லை.. எல்லாம் அந்த மருவத்தூர் ஆத்தாதான்!”.

“நீங்க உடனடியாக மருவத்தூர் சென்று ஒரு மணியை வாங்கிக் காணிக்கை செலுத்தி விட்டு வந்து விடுங்கள்! அந்தக் காணிக்கை செலுத்தி முடியும் வரை கூடக் காத்திருக்காமல் உங்கள் மகனைத் தேடி வந்து உங்கள் இருவருக்கும் காட்சி கொடுத்து, தானே திருஷ்டி பிழிந்து தன் கையாலேயே சாற்றை எடுத்து உங்கள் மகன் நாவில் தடவி விட்டுப் போயிருக்கிறாளே..!

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் என்று ஒவ்வொருவரும் தன் கோயில் தெய்வத்தைப் பற்றிப் பத்திரிகையில் போடுகிறானே..

இப்போது தெரிந்து கொள்! கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் யார் என்று தெரிந்து கொள்! மேல்மருவத்தூர் மகிமை பற்றிப் புரிந்ததா..?” என்றேன்.

“ஆமாம் சாமி!” என்று நன்றியுணர்வோடு தலையசைத்த அந்தக் கிராமத்துத் தம்பதிகளின் கண்களில் பொங்கிய அந்த ஆனந்தக் கண்ணீரில் நான் அம்மாவைக் கண்டேன்.

ஓம் சக்தி!

## மின் சக்தியால் உன் சக்தி அறிந்தேன்

பஞ்ச பூதங்களையும் தன்னுள் அடக்கி இப்பாராளும் பராசக்தி அடிகளார் ரூபத்தில் அருளாட்சி நடத்திவரும் மேல்மருவத்தூரில் அம்மாவின் திருவருள் தரிசனம் பெற வேண்டி அருள்கூடத்தின் முன் அமர்ந்து இருக்கும் திருக்கூட்டத்தினர்களோடு நானும் அமர்ந்து இருந்த வேளையில் எனது அருகில் அம்மாவிற்குப் பாதபூசை செய்ய அமர்ந்திருந்த ஒரு நபர் தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை என்னுடன் பகிர்ந்ததை நானும் உங்களோடு பகிர்கிறேன்.

**சக்தி குமார்**, B.A., C.C.I.S.. – மதுராந்தகம்

அருட்கூடத்தின் முன் சில பெண்கள் தட்டில், சில கிண்ணங்களில் மஞ்சள் நீர் மாதிரி கொஞ்சமும், ரோஜாவும் இருந்தது. அவர்களிடம் அந்த நபர் என்னங்க இந்த தட்டிலே.. என பேச்சை ஆரம்பிக்கவும் அதற்கு, சக்தி.. நம்ப அம்மாவுக்குப் பாதபூஜை செய்து விழுந்து வணங்கிவிட்டு வருவதாகத் தெரிவித்தனர். அதற்கு நபர், என்னங்க.. இந்த காலத்திலேயும் இப்படி இருக்கீங்க.. தேவையில்லாமல் காணிக்கை, பாதபூஜைன்னு செலவு செய்து அவர் காலையும் கழுவி அவர் காலிலேயே விழுந்து அந்த தீர்த்தத்தையும் குடிக்கிறீங்க? மூணாம் மனுசன் காலிலே விழுவதை விட தாலி கட்டிய புருசன் காலில் விழுந்தா ஆயிரம் கோடி புண்ணியம் கிடைக்கும். புருசனுக்கும் பெண்டாட்டி மேல பாசமும் வரும். இது தெரியாதா? என்றாராம்.

அதற்கு அந்தப் பெண்கள் கொஞ்சமும் கோபப்படாமல் சிரிச்சிக்கிட்டே அப்படியெல்லாம் சொல்லாதீங்க.. எங்க குடும்பத்தை அந்த மனித தெய்வம் அடிகளார்தான் காப்பாத்தறார் என்று பதிலுரைத்தனர்.

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

## மின் சக்தியால்...

இப்படிப் பேசி முடித்து அந்த நபரும் தனது சொந்த ஊர் சென்ற வேளையில் அவரது நிலத்து வேலையாள் வந்திருந்தார். அவரிடம் என்ன விசயம் என்று கேட்டதற்கு மோட்டார் பம்பு வேலை செய்யல, பயிரெல்லாம் தண்ணி இல்லாம காயுது. அதுதான் வந்தேன் என்றிருக்கிறார். அதனைக்கேட்ட இவர் அவருடன் சென்று மோட்டார் பம்பை சரி செய்கிறேன் என்று எதையோ தொடப்போக உயர் மின் கசிவு (High Tension Line) காரணமாக இவரை அடித்து தூரத் தூக்கிப் போட்டது.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் அந்த நபருக்கு தலையில் அடிபட்டு ரத்தம் வந்து, மயக்கம் அடைந்துவிட்டாராம். உடனே அங்கிருந்த சிலர் இவரை மருத்துவமனையில் சேர்த்தனர். இவரும் மூன்று நாட்களுக்கு மேல் மயக்க நிலையில் பேச முடியாமல் பார்க்க முடியாமல் இருந்ததைக் கண்டு மனைவி, குழந்தைகள் அழுது புலம்பினார்கள். பிறகு அம்மாவிடம் மாங்கல்யப் பிச்சை கேட்டு இவரது மனைவி மருவத்தூருக்கு வந்து கண்ணீரோடு வேண்டி அங்கவலம் வந்தார். அப்போது செவ்வாடை சக்தி ஒருவர் அம்மாவுக்குப் பாதபூஜை செய்துவிட்டு தாம்பூலத் தட்டுடன் வெளியே வந்தவரிடம் கெஞ்சி கூத்தாடிச் சிறிது பாதபூஜை தீர்த்தத்தைப் பெற்றுக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடி வந்து அம்மாவை வேண்டி இவரது வாயில் ஊட்டியிருக்கிறார்கள். இதெல்லாம் அந்த நபருக்குத் தெரியாது.

அடடே! சூரியனைக் கண்ட பனித்துளி போல, பாதபூஜை தீர்த்தம் சில துளிகள் உள்ளே சென்றதும் இவருக்கு சுய உணர்வு திரும்பி கண் திறந்து விழிக்க தீர்த்த பாட்டிலுடன் மனைவி மற்றும் பிள்ளைகள் நின்றிருக்க நடந்த விசயங்கள் முழுதும் அறிந்திருக்கிறார். பின் டாக்டர்கள் பரிசோதித்து பயப்பட ஒன்றுமில்லை எனக்கூறி டிஸ்சார்ஜ் செய்தனர்.

அம்மாவையும், பாதபூஜையையும் தீர்த்தத்தையும் கேலி கிண்டல் பேசியதற்குத் தண்டனைதான் இது என்றுணர்ந்து அந்த “பாதபூஜை தீர்த்தம்தான் உயிருக்குப் போராடும் நோயாளிக்கு உயிரைக் காக்கும் அருமருந்து” என்று உணர்ந்து, மறுவாரம் குடும்பத்துடன் பாதபூஜைக்கு செல்ல அங்கே அம்மா புன்னகையுடன் “என்ன சார் இவ்வளவு தூரம் புதுப்பிறவியெடுத்து இங்கே வந்திருக்கே. உன் பிரச்சனையெல்லாம் அம்மா பாத்துக்கும்” என்று சொல்லி இவர் கொண்டு சென்ற மாலையை இவருக்கே அம்மா போட்டு ஆசீர்வதித்தார்கள் எனச் சொல்லும்போது அந்த நபரின் கண்களில் நீர் சொறிந்தது. மொத்தத்தில் மின் சக்தியால் உன் சக்தி அறிந்தேன் அம்மா என்று உணர்ந்தவரைப் பார்த்தவுடன் எனக்கும் பாதபூஜை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கியது.

●●

## அன்னையின் ஜோதி

**உடலுக்கு உள்ளே நின்றாடும், உயர்ந்த மகாஜோதி.**

**உண்மையான ஞானத்தில், நடனமாடும் ஜோதி.**

**சக்தி மூன்றும் ஒன்றான, முழு முதற்ஜோதி.**

**மருவூர் மீது மலர்ந்துவந்த, மாசற்ற ஜோதி.**

**சுயம்பு வடிவில் சுடர்விடும், பாசமுள்ள ஜோதி.**

**அகிலம் காக்கும் அருமை, அடிகளார் தந்த ஆன்மிக ஜோதி.**

**ஜோதி – ஜோதி – ஜோதி, இது மணம் பரப்பும் மகத்துவஜோதி.**

**ஜோதி – ஜோதி – ஜோதி, இது நம்மைக்காக்கும் அருட்ஜோதி.**

**இருள் நீக்கும் ஜோதி, அருள்தரும் ஜோதி.**

**பரம்பொருளே ஏற்றிவைக்கும் ஜோதி,**

**பராசக்தி அவள் அருளால் வணங்கிடுவோம்**


**ஏற்றமிகு ஜோதி.**

**-சக்தி P..நாகேந்திரக்குமார்,**
பழனி, திண்டுக்கல் மாவட்டம்

# Sydney - Mandrams - Upcoming Events – January 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 01.01.2018 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 05.01.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.01.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.01.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.01.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அலைகடலுக்கே ஆணையிட்டாள்!

மேல்மருவத்தூர் நினைப்போர் மனதில் நிலைத்திடும் பெரும்பேர். கருதுவோர் கனியக் கனிய வைக்கும் பேரூர். கார்மேனி தாங்கிக் கார்மேகம் போலக் கருணை மழை பொழிய எவ்வுயிர்க்கும் தாயான பராசக்தி இறங்கியே அருள்புரியும் இனிதான திருத்தலம்.

"திருவாரூரில் பிறக்க முக்தி, காசியில் இறக்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி" – என்று ஒரு பழைய மரபு கூறும். இன்றோ மேல்மருவத்தூரில் மென்மொழி கூறிஇன்முகங்காட்டும் தாய் இனிதாகக் கூறுகிறாள். "மகனே! மேல்மருவத்தூர் மண்ணை மிதிக்க முக்தி!"

"மகனே! திருவிழாக்களும், பண்டிகைகளும் எனக்காக அல்ல மகனே! உங்களுக்காக! வேடிக்கை பார்க்கவாவது இந்த மண்ணை மிதிக்கட்டும், அருள் தரலாம் என்று தான் சாலையோரத்தில் காத்துக் கிடக்கிறேன் மகனே!" என்று காக்க வந்த அன்னை காத்துக் கிடப்பதாகச் சொல்கிறாள்.

### சக்தி திருவெண்காடு

"புல்லாகிப் பூண்டாகிப் புழுவாகி மரமாகிப் பல மிருகமாய்ப் பறவையாய்ப் பாம்பாய்க் கல்லாய் மனிதராய்த் தேவராய் இத்தாவர சங்கமத்தின் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து, களைத்துப் போன எண்ணிக்கையில்லாத இன்னல்கள் அடைந்த உயிர்களை உய்விக்கவே இந்தக் கலிகாலத்தில் மேல்மருவத்தூரில் தாய் இறங்கி வந்திருக்கிறாள். எண்ணற்ற வகைகளில் நம் இன்னல் இருள்களைப்போக்கி நிற்கிறாள்.

1 .செவ்வாடையணிதல் 2. அவள் திருத்தலத்தில் கால் பதித்தல் 3. அங்கவலம் வருதல் 4. அங்கவலம் வருவோருக்கு உதவுதல் 5. அர்ச்சனைகள் செய்தல் 6. ஆராதித்தல் 7. மந்திரம் படித்தல் 8. மாசறத்துப்புரவு செய்தல் 9. கலச நூல் சுற்றுதல் 10. கலச வேள்வி செய்தல் 11. எலுமிச்சம் பழ விளக்குப் போடுதல் 12. அன்னதானம் செய்தல் 13. ஆடைதானம் செய்தல் 14. அன்னதான எச்சில் இலை எடுத்தல் 15. கருவறைப் பணி செய்தல் 16. கழிவறை சுத்தம் செய்தல் 17. மருத்துவப் பணி செய்தல் 18. இலவசக் கண் மருத்துவம் செய்தல் 19. இலவசத் தொழிற்பயிற்சி – கல்விப்பயிற்சி செய்தல் 20. எளியோருக்கு உதவுதல், 21. பக்தர்களுக்கு விளக்கம் சொல்லுதல், 22. வழிகாட்டுதல், 23. வரிசை ஒழுங்கு செய்தல், 24. மருத்துவமனைகளில் அன்னையின் பிரசாதம் வழங்கி ஆறுதல் சொல்லுதல், 25. இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்ற காலங்களில் தாக்குண்டவருக்குத் தகுந்த உதவியெல்லாம் செய்தல், 26. உழைத்துப் பிழைக்க ஏழைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல், 27. மன்றங்கள் நடத்தி முறையாக வழிபாடு செய்தல், 28. உலகநலம் வேண்டி மேற்கண்ட தொண்டுகள் எல்லாம் மேற்கொண்டு செய்தல் 29. ஆடிப்பூரக் கஞ்சி வார்த்தல், 30. பால் அபிடேகம் செய்தல், 31. இலவசத் திருமணங்கள் ஏற்பாடுகள் செய்தல், 32. அன்னையின் அங்கவலம் காணல், 33. நவராத்திரி அகண்டம் தரிசித்தல், 34. சித்திரைப் பௌர்ணமியில் முத்திரை பதிக்கும் அன்னதானம் செய்தல், செய்வித்தல், 35.உலக அமைதி, வளம் மற்றும் நலம் வேண்டி ஆன்மிக ஜோதி ஏந்துதல், 36. ஆன்மிக மிதிவண்டிப் பயணம் செய்தல், 37. நடைப்பயணம் செய்தல், 38. அன்னையான நம் அடிகளார் நடத்தும் ஆன்மிக மாநாடுகள், ஊர்வலங்களில் பங்கு கொள்ளல், 39. இருமுடி தாங்கி வருதல், 40. எல்லாவற்றிற்கும் மேலாக அருள்திரு அடிகளாரைத் தரிசித்தல், 41. அருள்மொழி கேட்டல், 42. அவர்தம் குற்றேவல்கள் செய்தல்-என்று எத்தனை எத்தனை என்று எண்ணவும், விரல்விட்டு எண்ணவும் முடியாத, எத்தனை வழிகளை – அருளியிருக்கிறாள்.

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

# அலைகடலுக்கே...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

இவற்றில் ஏதாவதொன்றை எடுத்துச் செய்தாலும் எட்டி விடலாமே எவருக்குமே எட்டாத திருவடிகளை! இருவினைகள் அகல இருமுடி தாங்கச் சொன்னாளே! ஏன் என்றும் சொன்னாளே! அறிவோமே!.

“இருமுடி என்றால் இருள்முடி என்று பொருள்” என்றாளே! என்ன பொருள்? வாழ்கையில் இன்பம்-துன்பம் இரண்டும் பிறவியாகிய இருட்டை நோக்கியே இழுத்துச் செல்கின்றன. பிறவி என்னும் நோய் “இருளாக” நம்மைத் தன்னோடு முடிந்து வைத்திருக்கிறது. அந்த இருள் முடியை-இருமுடியை எடுத்து வந்து என் மண்ணில் வந்து அவிழ்க்கிறபோது இன்பம்-துன்பம் இரண்டும் விட்டு இறப்பு-பிறப்பு என்னும் இருளைக் கடந்து என்னோடு வந்து சேராமல் தடுக்கும் உங்களை இறுக்கும் புண்ணிய-பாவ இருள்முடிச்சை அவிழ்த்துக் கொள்ளுங்கள்” என்றுதானே அர்த்தம்?

பாவம்-புண்ணியம் இரண்டுமே முடிச்சுகள் தாம் - தளைகளே அவை. பாவம் இரும்பினால் செய்யப்பட்டவிலங்கு. புண்ணியம் பொன்விலங்கு. கட்டி வைக்கிற விலங்கு இரும்பால் இருந்தால் விலங்காகும். பொன்னால் செய்தால் கரும்பாகுமா? பாவம் செய்தாலும் பிறப்பு உண்டு, புண்ணியம் செய்தாலும் பிறப்புண்டு! அப்படியானால் இரண்டுமே இறையிடத்தில் சங்கமிக்க வைக்காமல் சங்கடப்படுத்தக்கூடிய சங்கிலிகளே!

இருமுடியில் கட்டி வைக்கப்படுகிற பொருட்களைப் பாருங்கள் ஒருபக்கம் அரிசி, தேங்காய், நாணயம் இன்னொரு பக்கம் தெய்வ அபிடேகத்திற்குப் பொருட்கள். அதாவது உலகியலைக் குறிக்கும் உணவுப் பொருள். காசு, பணம் ஒரு பக்கம்-அருளைப்பெற உதவி செய்து புண்ணியம் பெருக்கும் அபிடேகப் பொருட்கள் இன்னொரு பக்கம்.

“புண்ணிய பாவ இருமுடிச்சுகளையும்” பற்றறுப்பது போல் பற்றி அவிழ்த்து என்னோடு இரண்டறக் கலந்துவிட வாருங்கள்” என – அன்னை குறிப்பாக குறிப்பாக அழைப்பதால் இருமுடி அணிவதற்கு எல்லையில்லாத நிறையுண்டு. ஆனால், ஆன்மிக அர்த்தங்கள் எல்லாம் அத்தனை எளிதில் வசப்படப் போகுமோ?

எத்தனை குறைகள்? எத்தனை பிழைகள்? எத்தனை வருத்தங்கள்! எத்தனை எத்தனையோ சுமக்கின்ற தன் பிள்ளைகளின் வருத்தப் பாரமும் தீர்த்துவைத்தால் ஒழிய, ஆன்மிக அர்த்தங்கள் அத்தனை எளிதில் வசப்படப்போமோ? அதனால்தான் இருமுடி ஏந்துவோருக்கும், அவர்மூலம் மற்றெல்லார்க்கும் எவ்வளவோ துயர் துடைத்துக் காட்டுகிறாள் அன்னை.

**இரண்டு கிராமங்கள்**

இருமுடி அணிந்து விரதமிருந்த இருண்டு கடற்கரைக் கிராமங்களை நம் அன்னை எப்படிக் காத்தாள், பார்க்கலாம் வாருங்கள்.

புதுக்குப்பம்-பூம்புகார் பகுதியில் ஒரு கடற்கரைச் சிற்றூர்! கடல் நீர் நடுவே பயணம் செய்தாலும், குடிநீர் பெறவும் தெய்வத்தையே நம்பியுள்ள, நல்லவுள்ளங் கொண்டவர்கள் வாழும் சிற்றூர்! கடந்த தைப்பூசத்திற்கு முந்தைய தைப்பூசத்தில் அந்தக் கிராமத்திலிருந்து இருமுடி அணிந்தார்கள்.

கடந்த ஆண்டு 1993 டிசம்பர் நான்காம் (தஞ்சை) நாகை மாவட்டத்தில் கடற்கரையில் காற்றுத் தேவனும், கடற்கரைத் தேவியும், ஊழிக்காலத்து அழிவை – சீற்றத்தை உலகத்திற்கு ஒத்திகை நடத்திக் காட்டிய நாள். மணிக்கு 180கிமீ. வேகத்தில் மாபெரும் புயற்காற்று - சூறாவளி – சடச்சடவென வீசிற்று.

தத்தளித்தவர்கள் தத்தளித்தாலும் அழைத்தது அம்மாவையல்லவா? நாவடங்கி விழிகள் ஏறி நாற்புறமும் மரணம் சூழத் தவித்தாலும் மருவூர் எண்ணம் வந்து நின்றதல்லவா? அற்புதம் நிகழ்ந்தது.

கடுமை குறைந்தது. ஆர்ப்பரிக்கும் அலை கடலின் வேகம் குறைந்தது. அந்தக் கடல்மகளின் மக்கள் இரண்டு மணி நேரம் அலையில் அலைந்தபடி அலைக்கழிக்கப்பட்டாலும் அத்தனை பேருமே அந்தக் கிராமத்தில் காப்பாற்றப்பட்டனர்.

புயல் ஓய்ந்த பின்னால் ஒரு தொண்டன் தன்னோடு கடந்த ஆண்டு மாலை அணிந்து கொண்ட அவர்களைப் பார்த்து வரப்போனான். அவர்கள் கேட்ட முதல் கேள்வி.. ‘ஆன்மிகத்தில அவர்கள் எங்கே – நாம் எங்கே’ – என்று அவனை நாணச்செய்த கேள்வி.

“சக்தி! எப்ப சக்தி இந்த வருடம் மாலை போடுவது? அம்மா எங்களைக் காப்பாற்றி விட்டாள்! உண்ண உணவில்லை! உடுக்க உடையில்லை - இருக்க இடமில்லை – ஆனாலும் சக்தி நம்ம சக்திகளுக்கும் இங்கிருந்து மலைக்குப் போகும் அய்யப்ப சாமிகளுக்கும் கோயிலுக்குப் போக அம்மா காசு கொடுத்துவிட்டாள்! எப்படியோ?

(தொடர்ச்சி...7ஆம் பக்கம்)

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



# ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

## ஆலய சிறப்பு விழாக்கள்

## 2018 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 17 | 01.01.2018 | திங்கள் | ஆங்கிலப் புத்தாண்டு |
| மார்கழி | 17 | 01.01.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| தை | 01 | 14.01.2018 | ஞாயிறு | தைப்பொங்கல் |
| தை | 03 | 16.01.2018 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| தை | 18 | 31.01.2018 | புதன் | சித்தர்பீடத்தில் தைப்பூச ஜோதிப் பெருவிழா |
| மாசி | 03 | 15.02.2018 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| மாசி | 17 | 01.03.2018 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மாசி | 19 | 03.03.2018 | சனி |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 78ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| பங்குனி | 03 | 17.03.2018 | சனி | அமாவாசை - வேள்வி |
| பங்குனி | 04 | 18.03.2018 | ஞாயிறு | தெலுங்கு வருடப்பிறப்பு |
| பங்குனி | 17 | 31.03.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |

## அலைகடலுக்கே...

(6ஆம் பக்க தொடர்ச்சி)

தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தோமா? இதுவரை மீன் பிடிக்க நாங்கள்தான் போய்க்கொண்டிருந்தோம்! அந்த நேரம் - கொட்டிக் களைத்து வானம் சோம்பல் முறித்தது. கட்டக் கடவெனக் கார்மேகம் கர்ஜித்து வெறித்தது – பட்டப்பகலென மின்னல் கண்களைப் பறித்தது - இடியும் மின்னலும் கொட்டி முழக்க, “இதோ என் பலமெனக் “ காற்று சுழற்ற –

கட்டுமரங்கள் கட்டவிழ்ந்து பறக்க – தட்டுமுட்டுச் சாமான்கள் தறிகெட்டுக் கிடக்க – குடிசைகள் எல்லாம் எழும்புகிற இருபது மீட்டர் அலைகளுக்குக் குடைபிடித்து “விட்டுவிடு” என்று கெஞ்ச –

இளம் பிள்ளைகள், எழுகாளையர், உரம் மிகுந்த பெண்டிர், ஓடவும் நடக்கவும் முடியாத முதியோர் எல்லோரும் சேர்ந்து ஊருக்குள் புகுந்துவிட்ட கடல் நீரில் மிதக்க – கடலே கண்ணீரில் மிதக்க – யார் காப்பாற்றுவார்கள்? யாரையும் யாரும் காப்பாற்ற முடியாத சோகம் அங்கே வேகம் கொள்ள – ஒருவரையொருவர் கடைசி முறையாகப் பார்த்துக்கொள்ளும் கலக்கம் கலக்க – மரணத்தின் தலைவாயில் ஒரு கணத்தில் தெரிய –

“மருவத்தூர் அம்மா! அம்மா! ஓம் சக்தி! காப்பாற்று!” என்று ஒரே குலம்!

அது – காலங்கடந்தவளின் காதில் விழுந்தது போலும்! காலனைக் காலால் கடிந்தவள் அல்லவா அவள்? எங்கள் கைகளுக்கும், கனவுகளுக்கும் எட்டாத பெரிய பெரிய இறால் மீன்கள் பக்கத்திலிருக்கும் பணக்கார இறால் பண்ணைகளின் அணைகள் உடைத்துக்கொள்ள – நாங்கள் இருந்த பக்கம் - சுதந்திர நீரைச் சுவாசிக்கக் கூட்டமாய்ப் படையெடுத்தன. சேலைகளிலும், வேட்டிகளிலும் சிறைப்பிடித்தோம். இப்ப எங்க எல்லோருக்கும் கோயிலுக்குப் போகக் காசு இருக்கு.. எப்ப சக்தி மாலை போட?”

பரிதவித்த ஞானசம்பந்தப் பிள்ளைக்குப் பாலூட்டிய தாய்- ஏங்கி இறப்பு வந்துவிட்டது என்ற கலங்கி அழுத இந்த ஏழைப் பிள்ளைகளுக்காக இறப்பையே எட்டி உதைத்தது மட்டுமல்லாமல், இரைப்பை நிரப்ப இறால் மீனும் தந்து உதவினாள் என்பது சத்தியம்!

பூம்புகாரின் வடக்கே ஒரு கி.மீ.இல் புதுக்குப்பத்துப் பிள்ளைகளாவது புனர் வாழ்வு பெறப் போராடினார்கள். ஆனால் பூம்புகாருக்குத் தெற்கே மூன்று கிலோ மீட்டரில் - சின்னமேடு கிராமத்துச் செல்லப் பிள்ளைகள் சின்னாபின்னம் இல்லாமலே காப்பாற்றப்பட்டார்களே! அது எப்படி?

(தொடர்ச்சி..8ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – January 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 01.01.2018 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 05.01.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.01.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.01.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.01.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அலைகடலுக்கே...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

முன்னே சொன்ன அதே நாள். அதே நேரம்... அதே சூழல்.. Water! Water! Everywhere.. But there is not a drop of water to drink..." என்றார்களே. அப்படி எப்புறமும் தண்ணீர்.. (சின்ன மேட்டு மக்களும், அந்தச் சித்தாடைக்காரிக்கு முந்தைய ஆண்டுகளில் இருமுடி அணிந்தவர்களே! இப்போதும் அணிய இருப்பவர்களே!)

தங்கள் ஊருக்குள் இருந்த ஒரு அம்மன் கோயிலில் தஞ்சம் புகுந்தார்கள். ஆனாலும் பாதுகாப்பென்று கருதியிருந்த நேரத்தில் கதிகலங்க, மதிமயங்க ஒரு பயங்கரக்காட்சி...அது என்ன? கடல் பொங்கி வானத்திற்கும், பூமிக்கும் தண்ணீரால் சுவர் எழுப்பியதுபோல 20 மீட்டர் உயரத்திற்கு மேலே உயர்ந்த, இருநூறடி அகலத்திற்குத் தெற்கு வடக்கில் நீண்டு படையெடுத்து வந்த பயங்கர அரக்கன் போல நிமிர்ந்து, முழுங்கி விழுங்க (180 கிமீ. வேகத்தில்) வருகிறதே! என்ன செய்வோம்?

"ஓம் சக்தி! உனக்கு விருப்பம் என்றால் காப்பாற்று! இல்லேன்னா ஒன்றாகவே எல்லோரையும் கொண்டு போ! ஓம் சக்தி1 ஓம் சக்தி! ஓம் சக்தி! - ஓலம் எழுந்தது. ஞாலம் காக்க வந்த நம் அன்னையின் காதில் ஒலித்தது போலும்!

எட்டடிக்கும் கிட்டவே எழும்பி வந்த அலையரக்கன் எழுந்தவாறே சுருண்டான். பின்னோக்கிப் புரண்டான்.. எல்லாம் ஒரு கணந்தான்! எல்லோரும் பிழைத்தார்கள். அவர்களைக் கண்டபோது அவர்களும் கேட்ட முதல் கேள்வி "எப்ப சக்தி மாலை போட?"

அருள்திரு அடிகளார் உத்தரவின்படி தஞ்சை, நாகை மாவட்டத்தில் ஆறு எல்லைகளில் பூசை செய்து திருஷ்டி கழிக்கப்பட்ட எல்லைகளில் ஒன்று பூம்புகார்க் கடற்கரை. அன்னையின் உத்தரவின்படி கடற்கரைக் கிராமங்களில் குருநாதர் பிறந்தநாள் முடிந்து, அன்னையான அவர்தம் பிரசாதங்கள் கொடுக்கப்பட்ட கிராமங்கள் சின்ன மேடும், புதுக்குப்பமும்!

இயற்கைச் சக்திகளை ஆணையிட்டு அடக்கச் சக்தி தந்தது எது? ஆர்ப்பரிக்கும் புயலிடையே அன்னையை நோக்கி அழைக்க வைத்தது எது? ஆற்றாது அரற்றிய அழுகுரல் கேட்டுப் பிள்ளைகளைப் பிழைக்க வைத்தது எது?

இயற்கைச் சீற்றத்தை எதிர்கொள்ள, இதயங்களின் ஏற்றத்தை மருவூர் நோக்கித் தோன்றச் செய்தது எது?

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)

## அலைகடலுக்கே...

(8ஆம் பக்க தொடர்ச்சி)

அன்னையின் உத்தரவும், அவள் அருட்பிரசாதமும், இயற்கையாகவேதான் உதித்து, இவ்வுலகில் அவதரித்து, “அடிகளார் அவதாரம்! ஆன்மிகத்திற்கு ஆதாரம்!
அடிகளார் அவதாரம்! அருள்நெறிக்கு ஆதாரம்!
அடிகளார் அவதாரம் ஆதிபராசக்திக்கே ஆதாரம்!”
என்று முழங்கி அருள்காத்து உயிர் என்ன பயிர் காக்கும் உத்தமியாள், மேல்மருவத்தூர் மெல்லியளால் மேவு புகழ் இருமுடியுமல்லவா?

இருமுடி ஏந்துவோம்! இருவினை நீக்குவோம்!
இருமுடி ஏந்துவோம்! எளியவர்க்கு உதவுவோம்!
இருமுடி ஏந்துவோம்! எவ்வுலகும் காப்போம்!
இருமுடி ஏந்துவோம்! இயற்கையே ஆனவரின்
இன்னருளை நாம் பெறுவோம்!

ஓம் சக்தி!

# வேள்வியில் மந்திரம் படித்தபோது

**ச**க்தி ஏ.எம்.சுப்பிரமணியம் விழுப்புரம் வட்டம் அரைசூரைச் சேர்ந்தவர். ஆரம்ப நாட்களில் அன்னையின் அருள்வாக்கு கேட்டு, அன்னையின் தொண்டராக மாறியவர்.

ஒருமுறை அருள்வாக்கு கேட்கப் போனார், “நாளை ஆத்தூரில் வேள்வி நடக்கப்போகிறது. அதில் போய்க் கலந்து கொள்ளடா மகனே! உன் குடும்பத்தை நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றாள் அன்னை.

அன்னையிடமிருந்து வேகமாக வார்த்தைகள் வந்து விழுந்தாலும் அருள்வாக்கு கேட்பது அவருக்கு அதுவே முதன்முதல் என்பதாலும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. வெளியே வந்து செவ்வாடைத் தொண்டர் ஒருவரிடம் விவரம் கேட்டார்.

“செங்கற்பட்டு அருகில் உள்ள ஆத்தூரில் நாளை சில வீடுகளில் குடும்ப நல வேள்வி நடக்க இருக்கிறது. அதில் கலந்து கொள்ளச் சொல்லி இருக்கிறாள் அன்னை. நல்ல சந்தர்ப்பம். நழுவ விடாதீர்கள். அப்புறம் உங்கள் விருப்பம்” என்றார் அவர்.

**வேம்பு**

“என்னிடம் செவ்வாடை இல்லையே..?” என்று சொல்லித் தயங்கினார் சுப்பிரமணியம். அந்தத்தொண்டரோ தன் செலவில் செவ்வாடை வாங்கித்தந்து “நானும் அங்கேதான் போகிறேன், நீங்களும் என்னுடன் வாருங்கள்” எனக்கூறி அழைத்துச் சென்றார்.

அன்று ஆத்தூரில் 20 குடும்பங்களில் குடும்ப நல வேள்விகள் நடக்க இருந்தன. தொண்டர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து செயல்பட்டனர்.

1008 போற்றி மலர்கள் மந்திரம் படிக்க ஒரு குழு
1008 போற்றித் திருவுரு மந்திரம் படிக்க ஒரு குழு
பூசைகளைக் கவனித்துக்கொள்ள ஒரு குழு

அப்போதெல்லாம் ஒவ்வொரு வேள்வி நடந்து முடிகிறவரை அருள்திரு அடிகளார் அவர்களும் கூடவே இருந்து வேள்வியை மேற்பார்வையிடுவார்கள். வேள்விக்குப் பாதுகாப்பு அளிப்பார்கள். வேள்வி முடிந்தபிறகு தானே தன் திருக்கரங்களால் தீபாராதனை காட்டி முடித்து அந்த வீட்டைச் சுற்றித் தன் கரங்களால் கலச தீர்த்தம் தெளித்துவிட்டு வருவார்கள்.

திரு.சுப்பிரமணியத்தை மந்திரம் படிக்கும் குழுவில் சேர்த்துக் கொண்டு அவரை ஒரு வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அது அரிசன மக்கள் குடியிருப்பில் உள்ள ஒரு வீடு. அவர் உயர் ஜாதியைச் சேர்ந்தவர். ஏராளமான நிலபுலன்களோடு கிராமத்தில் வசதியாக இருப்பவர். தன் நிலத்தில் அரிசனத் தொழிலாளிகளை அமர்த்தி விவசாய வேலை பார்ப்பவர். அதனால் உயர் சாதியைச் சேர்ந்த நாம், இந்த அரிசனர் வீட்டில் எப்படி உட்காருவது? எப்படி மந்திரம் படிப்பது? சிறுவயது முதலே அரிசனர் வீட்டுக்குச் சென்றது கூட இல்லையே..! அப்படியிருக்க, இப்போது அரிசனர் வீட்டில் சென்று வேள்வியில் கலந்துகொண்டால் நம் குடும்ப கௌரவம் என்னாவது? என்ற உணர்வுகள் தலை தூக்கின. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்தார் அவர்.

(தொடர்ச்சி...10ஆம் பக்கம்)

## Melbourne - Mandrams – Upcoming Events – January 2018

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Once the month on Sunday
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**

Rupert Drive - Mulgrave 3170
(Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **07.01.2018** | **Sunday** | **09.00a.m.**<br>**03.00p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |

# வேள்வியில்...

ஏதாவது ஒரு காரணம் சொல்லி அங்கிருந்து தப்பித்துக்கொள்ள விரும்பினார் சுப்பிரமணியம். அப்போது அவருக்கு உடல் நலம் சரியில்லை. அதனையே காரணம் காட்டி நான் ஊருக்குப் போக வேண்டும் என்றார்.

தொண்டர்கள் அவரை விடுவதாக இல்லை. அவரை அருள்திரு அடிகளாரிடம் அழைத்துச் சென்று, "இவர்க்கு உடல் நலம் சரியில்லையாம். ஊர் திரும்ப வேண்டும் என்று சொல்கிறார்" எனக் கூறினார்கள்.

ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி, அதில் கொஞ்சம் விபூதி போட்டுக் கொடுத்து "இதைக் குடியுங்கள் சார்!" என்றார் அடிகளார். அவ்வாறே குடித்த பிறகு குணமாகிவிட்டது.

இனி எந்தக் காரணம் சொல்லித் தப்புவது..?
அரிசனக் காலனிக்கு அந்த வீட்டு வேள்விக்கு – மந்தரம் படிக்க, வேண்டா வெறுப்பாகத்தான் போனார் சுப்பிரமணியம்.

அங்கே வேள்வி தொடங்கப்பட்டது. குரு போற்றி படித்த பிறகு வேண்டுதற்கூறு பாடி முடிந்தது. அடுத்து மூலமந்திரம் சொல்லி 1008 மந்திரங்களைத் தொடங்க வேண்டும். மந்திர நூலைப் பிரித்து, 1008 போற்றி மந்திரம் சொல்ல முயன்ற சுப்பிரமணியத்துக்கு அடுத்து ஒரு அதிர்ச்சி..! ஆம்! அந்த மந்திர நூலில் உள்ள மந்திர வரிகள் எதுவுமே கண்ணுக்குத் தெரியவில்லை.

என்ன இது..? மந்திர நூலில் அச்சுக்கோளாறா..? நம் கண்களில்தான் கோளாறா..?
என்ன இது? ஏன் இப்படி? அருகில் இருப்பவர்களெல்லாம் மந்திரம் படித்துக்கொண்டிருக்கும்போது அந்தக் குழுவில் கலந்து கொண்டு நாம் மட்டும் எப்படி சும்மா இருப்பது..?

நடப்பதோ வேள்விப் பூஜை. நம்மால் பூஜைக்கு ஏதாவது பங்கம் வந்து விடுமோ..? என்ற பயம் வேறு.

எழுத்துக்கள் எதுவும் தெரியவில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டு மந்திர நூலைப் பார்க்கிறார் சுப்பிரமணியம்.

இப்போது.. மந்திர நூலில் அடிகளாரின் உருவம் மட்டுமே தெரிகிறது. மந்திர நூலில் எழுத்துக்கள் இல்லை. இறுதிவரை அதே காட்சி. மெய்மறந்து அப்படியே அமர்ந்தபடி இருந்தார்.

சாதி அகங்காரம் என்ற ஒன்று ஆட்டிப்படைத்தால்.. வேண்டா வெறுப்பாக அந்த வீட்டு வேள்வியில் கலந்து கொள்ள வந்ததால்... அம்மா நமக்கு இப்படி ஒரு பாடம் புகட்டினாளோ.. என்று உள்ளுக்குள் எண்ணி மறுகினார் சுப்பிரமணியம்.

அவருக்குள் இருந்த அந்த உயர் சாதிச்செருக்கு தொலைந்தது.

(11ஆம் பக்க...தொடர்ச்சி)

## Melbourne - Mandrams – Upcoming Events – January 2018



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**

Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 01.01.2018 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 05.01.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.01.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.01.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.01.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Once a month - (Sunday 4.00p.m. – 6.00p.m.)**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## வேள்வியில்...

(10ஆம் பக்க தொடர்ச்சி..)

காணும் பொருளில் காட்சி அளிப்பவளே.. அம்மா..தாயே.. என்னை மன்னித்து விடு! என்று மானசீகமாக வேண்டினார்.

ஒரு மந்திர நூலில் கூட அன்னை காட்சி கொடுப்பாள்.

சாதிப்பற்றும் சாதி அகங்காரமும் கொண்டவர்கள் ஆன்ம வளர்ச்சி பெற முடியாது. அவர்களுக்கு இறையருள் எளிதில் கிட்டாது என்று காலம்காலமாக நம் பெரியவர்கள் சொல்லிக்கொண்டுதான் வருகின்றனர். அத்தகைய சாதிச்செருக்கு கொண்டவர்களுக்கு இறைவன் பாடம் புகட்டியதாகவும் அடியார்கள் வரலாறுகளில் பார்க்கிறோம்.

வைணவ சமயத்தை வளர்த்தவர்களில் 12 ஆழ்வார்கள் முக்கியத்துவர்கள். அவர்களுள் திருமழிசை ஆழ்வார் ஒருவர். ஒருமுறை அந்த ஆழ்வார் பெரும்புலியூர் என்ற ஊருக்குப் போனார். அங்கே வேதியர் சிலர் யாகம் செய்ய யத்தனித்தனர். அங்கு வந்த ஆழ்வாரை அங்கே அமரும்படிச் சிலர் கூறினார். அவர் மிகப்பெரிய யோகி! ஆனாலும் தாழ்ந்த சாதிக்காரர் ஆயிற்றே என எண்ணி அங்கிருந்த வேறு சில வேதியர்கள் அருவருப்பு அடைந்தனர். இதனை ஆழ்வார் குறிப்பாலறிந்து தன் மார்பில் திருமால் ஏந்திய சக்கரம் ஒளியோடு சுழல்கிற காட்சியைக் காட்டினார். அதன்மூலம் திருமாலும் தானும் ஒன்று என்பதை உணர்த்தினார்.

யோக நெறியில் இறைவனை அடைந்தவர்கள் இறைவன் உருவத்தை அடைவர் என்பது சாத்திரம். அந்த நிலைக்குச் சாரூபம் என்று பெயர். தான் அந்த நிலையைக் கைவரப் பெற்றவன் என்பதைச் சாதி அகங்காரம்கொண்ட வேதியர்களுக்குத் திருமழிசை ஆழ்வார் உணர்த்தினார் என்பது வரலாறு.

ஓம் சக்தி!

# Divine Miracles at Melmaruvathur

## A Riddle:

Kuppuswamy was a Government Accountant who had returned from service. He had a problem. He could not get his daughter married at the proper time. His sister had an only son who had studied only up to the tenth and was unemployed. Kuppuswamy did want to give away his daughter in marriage to him but the daughter was not willing as she was more educated than her aunt's son. The daughter was a devotee of Mother. She wanted to go for revelation before deciding about her marriage. Mother said, "give away your daughter to your sister's son, everthing will be fine". She said that he will get him a job in the government in a year. Kuppuswamy was confused and the daughter was also distressed. He however consoled his daughter and came out. He found a dollar in the place where he had sat and eaten food. This was thought to be an auspicious sign by Kuppuswamy and he got his daughter married to his sister's son. He also started a business for his son-in-law. In afew months his sister's husband suddenly died. He had been a government public service employee. According to the new decision taken by the Government, a Government employee's son becomes eligible for his father's job. Kuppuswamy's son-in-law Bhaskar got the job in spite of his lack of education. It is due to Mother's grace that they are fine today.

***

## ஒன்பதுடன் நிறுத்திக் கொள்ளாதே:

"தொடர்ந்து இருமுடி செலுத்து! ஒன்பது மாலை போதும்! பத்து மாலை போதும் என்று நிறுத்திக் கொள்ளாதே! நீ செலுத்தும் ஒவ்வொரு இருமுடிக்கும் கட்டாயம் பலன் உண்டு".

- **அன்னையின் அருள்வாக்கு**


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## நம் சிற்றறிவுக்கு எட்டாதது

**ஒ**ரு நாள் கடலூர் பக்கத்திலுள்ள ஒரு பெண்மணி மருவத்தூர் வந்தார். கணவனை இழந்தவர் அவர். எப்போதும் வெள்ளைச்சேலை அணிந்தபடி இருப்பார். ஒவ்வொரு கோயிலாக போய்த் தரிசனம் செய்தபடி எஞ்சிய வாழ்நாளைக் கழித்து வந்தவர் அவர். இரக்க சுபாவம் கொண்டவர், தருமசிந்தனை உடையவர். எங்கே போனாலும் கூடவே ஒரு சிறுவனை அழைத்துக்கொண்டு போவார்.

அந்தச் சிறுவனோடு மருவத்தூர் வந்தார். அவனை விட்டுவிட்டு அம்மாவிடம் அருள்வாக்கு கேட்டுவிட்டு வெளியே வந்தார்.

அந்தச் சிறுவனுக்கும் அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க ஆசை! "அம்மா! எனக்கும் இரண்டு ரூபாய் கட்டணத்தைச் செலுத்திப் பதிவு செய்துகொண்டு அவன் அம்மாவிடம் அருள்வாக்கு கேட்கப் போனான்.

அவனிடம் அம்மா சொன்னாளாம். "நீ ஏண்டா மகனே இங்கு வந்தாய்? உனக்கு என்ன குறை வைத்திருக்கிறேன்? போடா! போய் ஒரு பெட்டிக்கடை வைத்துப் பிழைத்துக் கொள்ளடா!" என்று சொல்லி அனுப்பிவிட்டாளாம்.

வெளியே வந்து நம் தொண்டர்களிடம் இதைச் சொன்னான். அவனைப்பற்றி விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் இவை:

அவனுக்கு அப்பாவும் இல்லை! அம்மாவும் இல்லை! எந்த ஆதரவும் இல்லை. அந்த விதவைப் பெண்மணிக்கு எடுபிடியாக வேலை செய்கிறவன் அவன். சாப்பாடு, துணிமணி, செலவு எல்லாம் கொடுத்து அவனைப் பிள்ளை போலக் கவனித்துக் கொள்கிறார் அந்தப் பெண்மணி. ஆதரவற்ற அந்தப் பையன் எப்போதும் தன் ஊரில் உள்ள காளியைக் கும்பிட்டுக் கொண்டிருப்பவன். அந்தக் காளியையே தாயும், தகப்பனுமாக கும்பிட்டு வருகிறான்.

மற்ற சிறுவர்களாக இருந்தால் சமூக விரோதிகளின் பழக்கம் ஏற்பட்டு பிக்பாக்கெட், திருட்டு போன்ற காரியங்களில் ஈடுபட்டு இளங்குற்றவாளிகளாக மாறியிருப்பார்கள்.
என்ன பூர்வ ஜென்மத்தொடர்போ? பிஞ்சு வயதில் காளியிடம் அவனுக்குப் பக்தி!

உலகியல் கண்ணோட்டப்படி அவன் தாய் தந்தை ஆதரவு அற்றவன். என் பெயரைச் சொல்லி ஒரு பெட்டிக்கடை வைத்துப் பிழைத்துக்கொள் என்று ஆதிபராசக்தி என்ற பரம்பொருளே சொல்கிற அளவு வறிய நிலையில் இருப்பவன். அத்தகையவனைப் பார்த்து "உனக்கு என்னடா குறை?" என்று அன்னையே கேட்கிறாள் என்றால் என்ன பொருள்?

காசு பணம் நிறைந்த வாழ்க்கையையே நாம் நிறைந்த வாழ்க்கை என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அன்னையின் கணக்கோ வேறுவிதமாக இருக்கிறது!

அந்த ஆன்மாவுக்கு ஏதோ ஒரு தெய்வீகப் பாதுகாப்பு அரண் ஒன்றை அமைத்தே அவனை இந்த உலகத்தில் பிறக்க வைத்தாள்போலும்!

இதெல்லாம் நம் சிற்றறிவுக்கு எட்டாதவை!

## அன்னையின் அருள்வாக்கு

### உள்ளத்தில் இருக்கும் ஆன்மா

**'உள்ளத்தில் இருக்கும் ஆன்மா தெளிவாகவும், கோபம் இல்லாமலும் அமைதியாகவும் இருக்க வேண்டும்'.**

### கண்கள் காட்டிக் கொடுத்துவிடும்


**"ஒருவனுடைய உள்மனம், நிதானம், தெய்வபக்தி, அவன் எப்படிப்பட்டவன் என்பதை அவனது கண்களைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.**

**பூமியில் உள்ள பொருள்களைத் தோண்டிப் பார்த்துத் தெரிந்து கொள்வதைப் போல, ஆன்மாவை வைத்தே ஒருவனைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்."**

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## தாழ்த்தப்பட்டவர்கட்குத் தொண்டு செய்யுங்கள்

“தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புக்குச் சென்று ஒரு நாள் மட்டும் அங்கு சுகாதாரத் தொண்டு செய்தால் போதாது.

வருடத்திற்கு ஒரு முறை தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக்குளிப்பது போல, எப்போதாவது ஒரு முறை தூய்மையைப்பற்றி எடுத்துச் சொல்வதால் எந்தப் பயனும் கிடைக்காது. தொடர்ந்து அவர்களோடு இருந்து அவ்வப்போது எடுத்துச் சொன்னால் உரிய பலன் கிடைக்கும்.

ஆனால் இதைச் செய்வதற்கு வேண்டிய பொருளும் நேரமும் உங்களுக்குக் கிடைக்காது. எனவே, அவர்களின் ஓரிரு குழந்தைகளை அல்லது சிறுவர்களை நீங்கள் தத்து எடுத்துக்கொண்டு அவர்களின் உணவு, உடை, கல்வி மற்றும் தொழில் போன்ற பொறுப்புகளை நீங்களே எடுத்துச் செய்யுங்கள். இதை உங்களால் செய்ய இயலும் என்பது மட்டுமல்லாமல் இப்படிச் செய்வதால் அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொண்டு, உங்களைப் பின்பற்றவும், தங்களைத் திருத்திக் கொள்ளவும் ஏதுவாகும்”.






# Melbourne - Mandrams – Upcoming Events – January 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 05.01.2018 | Friday | மார்கழி | 21 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 07.01.2018 | Sunday | மார்கழி | 23 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 12.01.2018 | Friday | மார்கழி | 28 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 14.01.2018 | Sunday | தை | 01 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 19.01.2018 | Friday | தை | 06 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 21.01.2018 | Sunday | தை | 08 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 26.01.2018 | Friday | தை | 13 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 28.01.2018 | Sunday | தை | 15 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |

**01.01.2018 – ஞாயிறு - பௌர்ணமி, 16.01.2018 – செவ்வாய்- அமாவாசை**

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த

**www.adhiparasakthi.co.uk**

**ஆதிபராசக்தி இணையத்தளம்**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

**2017**

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2018 | ஞாயிறு | மார்கழி | 17 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 05.01.2018 | வெள்ளி | மார்கழி | 21 | சங்கடஹர சதுர்த்தி |
| 12.01.2018 | வெள்ளி | மார்கழி | 28 | ஏகாதசி விரதம் |
| 14.01.2018 | ஞாயிறு | தை | 01 | பிரதோஷ விரதம்<br>தைப்பொங்கல் |
| 16.01.2018 | செவ்வாய் | தை | 03 | **அமாவாசை விரதம்** |
| 20.01.2018 | சனி | தை | 07 | சதுர்த்தி விரதம் |
| 22.01.2018 | திங்கள் | தை | 09 | ஷஷ்டி விரதம் |
| 26.01.2018 | வெள்ளி | தை | 13 | கார்த்திகை விரதம் |
| 27.01.2018 | சனி | தை | 14 | ஸ்மார்த்த ஏகாதசி விரதம் |
| 28.01.2018 | ஞாயிறு | தை | 15 | வைஷ்ணவ ஏகாதசி விரதம் |
| 29.01.2018 | திங்கள் | தை | 16 | பிரதோச விரதம் |
| 31.01.2018 | புதன் | தை | 18 | **தைப்பூச ஜோதி** – மேல்மருவத்தூர்<br>**பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

நாம் நமது பீடத்தில் மூன்று முறை வலம் வருவதற்கும், மூன்று சுற்றுகள் தீபாராதனை செய்வதற்கும் ஏதாவது சிறப்புத் தன்மைகள் உள்ளனவா அம்மா..?

“என்னிடம் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கித் தூய்மையான மனத்துடன் உன்னை வழிபடுகிறேன்” என்பதைக் குறிப்பதற்காகவே சித்தர் பீடத்தை மூன்று முறை வலம் வருகிறோம். மூன்று சுற்றுகள் தீபாராதனை செய்கிறோம்.